
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 ஜூன் 2002 இதழ் - 6



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

1. ஆசிரியர் உரை 1
2. பிலிப்பி பட்டணம் பற்றி 9
3. புதிய ஏற்பாட்டு சபை 10
4. பெண்கள் பகுதி 12
5. வாலிபர் பகுதி 15
6. தானியேல் ஒரு கண்ணோட்டம் 19
7. சிறுவர் பகுதி 20
8. புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின்.... 22
9. மனுஷர் மேல் விழுந்த கடமை 26
10. விசுவாசத்தின் அடிப்படைகள் 31

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.15 June - 2002 Issue-6


ஆசிரியர் உரை

# "பந்தயப் பொருளுக்காக.."

**நா**ம் விரும்பும் ஒன்றைப் பெறுவதற்காகவோ அல்லது ஆசைப்படும் ஒன்றை அடைவதற்காகவோ ஒன்றைச் செய்வதும், செய்யாமலிருப்பதும் அல்லது ஒரு காரியத்தை உடனடியாக விடுவதும், விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதும் நமக்குப் புதிதானதோ அல்லது புரியாததோ அல்ல. ஏனெனில், இப்பூமியில் வாழ்கின்ற நம் ஒவ்வொருவருக்குமே இப்படிப்பட்ட அனுபவம் அவசியம் இருக்கவே இருக்கும். ஒருவேளை, நம்முடைய இச்செயலின் மூலமாக நாம் பெற்றுக்கொண்டது அல்லது ஆசையாய் அடைந்தது எதுவாக இருந்தாலும், அதனால் விளையும் நன்மை அல்லது கிடைக்கும் பலன், இப்பூமியின் வாழ்க்கையோடு முடிந்து போகக் கூடியதாகவே இருக்கும். அது, எவ்வளவு சிறப்புக்குரியதாக இருந்தாலும், நம்முடைய வாழ்க்கை முடிவடையும்போது, அதுவும் தானாக முடிவுக்கு வந்துவிடும். இன்னும் சில சந்தர்ப்பங்களில், நாம் அதிக ஆசையோடும், மிகுந்த எதிர்பார்ப்போடும் பெற்றுக்கொள்பவை, நம்மை 'அம்போ' என்று விட்டுவிட்டு, லாவகமாகக் கைமாறிப் போய்விடும்.

இப்படி, இப்பூமியோடு முடிந்து போகும் ஒன்றைப் பற்றியோ அல்லது நம்மைப் பதற வைத்துவிட்டுப் பாதியில் கைமாறும் ஒரு காரியம் பற்றியோ, நான் உங்களோடு பேச வரவில்லை. ஏனெனில், நாம் ஆவியின் சிந்தைக்குரிய ஆவிக்குரிய மக்கள். இம்மைக்காக வாழாமல், மறுமைக்காக வாழ்பவர்கள். மறுமையின் காரியங்களில் மனதைச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள். ஆகவே, மேற்கண்ட கருத்தை அடிப்படையாக வைத்து, மறுவாழ்வுக்கான காரியங்கள் சிலவற்றை இங்கே கவனிப்போம்.

இன்றைக்கும் நம்மைக் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டில், இறைமகன் இயேசுக் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக, அநேகரால் அறியப்பட்டவர் அல்லது அறியப்பட வேண்டியவர் அப்போஸ்தலன் பவுலடியாரே. ஒருவேளை, நமதாண்டவரால் அழைக்கப்பட்டு, அவருடன் உண்டு, உறங்கி சுற்றித் திரியும் வாய்ப்பைப் பெறாவிட்டாலும், அவரால் கொடுக்கப்பட்ட பிரதான கட்டளைக்கு அந்நியராக இருந்தாலும், பெந்தெகொஸ்தே நாளில் நடந்த ஆவியின் அபிஷேகத்திற்கு அப்பாற்பட்டவராக இருந்தாலும் கூட, தன்னுடைய சிறப்புத் தகுதியாலும், தன்னலமற்ற சிலுவைச் சேவையாலும், அப்பாக்கியம் பெற்றவர்களையெல்லாம் பின்னுக்குத்தள்ளி, ஊழியத்தின் பாதையில் தனி இலக்கணம் வகுத்து, தனக்கென முத்திரை பதித்து, தன்னிகரற்றவராய்த் திகழ்ந்தவர் இப்பவுல். இவரைப் பற்றி எண்ணுவது, இனிமையானது; எழுதுவது அலாதியானது; பேசுவதோ பரவசம் நிறைந்தது. இக்குணாளனைக் குறித்து எப்பொழுது எண்ணினாலும், எவ்வளவு எழுதினாலும், எப்படிப் பேசினாலும் அது தகும். பேசியும், எழுதியும் காலம் கழித்தவரைக் குறித்துப் பேசுவதும், எழுதுவதும் நியாயந்தானே!

சரி, புதிய ஏற்பாட்டில் பாதிக்கும் மேற்பட்ட நூல்களுக்குச் சொந்தம் கொண்டாடும் தகுதி கொண்ட இப்பவுலடியாரின் நூல்கள், ஏனைய எழுத்தாளர்களின் நூல்களைக் காட்டிலும், குறிப்பிடத்தக்க அம்சங்களில் வேறுபாடு கொண்டவை. அனைத்து நூல்களும் ஆவியானவரின் ஏவுதலால் அருளப்பட்டிருந்தாலும், இவருடைய நூல்களில், ஆங்காங்கே இருந்த பிரச்சினைகள் நேரிடையாக எடுத்துக் கையாளப்பட்டு, அதற்கான தீர்வும் வெகு நேர்த்தியாகக் கொடுக்கப்பட்டிருக்கும். இருப்பினும், தன்னுடைய நிருபங்களிலேயே, "தனித்துவம்" வாய்ந்தது என்று கருதப்படும்படியான ஒரு நிருபத்தையும் அவர் எழுதியுள்ளார் என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. இந்நிருபத்தில், அவருடைய ஏனைய நிருபங்களில் பொதுவாகக் காணப்படும் குறைகளைச் சுட்டிக்காட்டுதல், கண்டித்துணர்த்துதல், கடிந்து கொள்ளுதல் என்று எதுவுமே பெரிதாக இல்லை. தன்னுடைய இரண்டாவது சுவிசேஷ சுற்றுப் பயணத்தின்போது (அப்.16 அதி) ரோமாபுரியின் காலனியாக இருந்த இப்பட்டணத்தில், தன்னால் ஏற்படுத்தப்பட்ட சபையாருக்கு. மிகுந்த நேசத்தோடும், பாசத்தோடும், நன்றியோடும் இந்நிருபத்தை எழுதியுள்ளார். இந்நிருபம் தான், சிறை நிருபங்களில் ஒன்றாகக் கருதப்படும், பிலிப்பியர் நிருபம்.

சிறப்புக்குரிய இந்நிருபத்தின், மூன்றாம் அதிகாரத்தில் தான், நமது தலைப்பை அலங்கரிக்கும் பகுதி இடம் பெற்றுள்ளது. இங்கே, கிறிஸ்து இயேசுவால், தான் பிடிக்கப்பட்ட நோக்கத்தை பவுலடியார் இவ்விதம் எடுத்துக் கூறுகிறார். **"சகோதரரே, அதைப்பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்"** என்று (பிலி. 3:13.14)

இந்த இரண்டு வசனங்களையும் நாம் நெருங்கிப் பார்த்தால் "**பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக**" பவுலடியார் செய்த மூன்று காரியங்கள் பளிச்செனத் தெரியும். பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக, **முதலாவது,** பின்னானவைகளை மறக்கிறார். **இரண்டாவது** முன்னானவைகளை நாடுகிறார். **மூன்றாவதாக** இலக்கை நோக்கித் தொடருகிறார். இந்த மூன்று காரியங்களையும் செய்ய தீர்மானிக்கும் முன்பாக அவருடைய எண்ண ஓட்டம் எப்படியிருந்ததென்பதை நாம் கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். "எப்படியாயினும்" தான் மரித்தோரிலிருந்து "உயிரோடழுந்திருப்பதற்கு தகுதி" ஆக வேண்டுமென ஆசைப்படுகிறார். அப்படி தன்னை தகுதிப்படுத்துவதற்காகவும், தன்னை தகுதிப்படுத்தும் கிறிஸ்துவுக்காகவும், எல்லாவற்றையும் நஷ்டமாக விடவும், குப்பையுமாக எண்ணவும் தயாராகிவிடுகிறார். (வசனம் 11)

அடுத்து, உயிரோடெழுந்திருக்கும் நாளுக்கான தகுதியை நான் அடைந்துவிட்டேனா, அதற்காக நான் தேற வேண்டிய அளவுக்கு தேறிவிட்டேனா என்று தன் தகுதியையும், தன் நிலையையும் தானே தராசில் நிறுத்துப் பார்க்கிறார். (வசனம் 12) அடுத்து, கிறிஸ்து இயேசுவால் தான் "பிடிக்கப்பட்ட" நோக்கத்தையும் எண்ணிப் பார்க்கிறார். அதாவது, தான் தமஸ்கு செல்லும் வழியில் (அப். 9:2) இயேசுவால் பிடிக்கப்பட்டதை நினைத்துப்பார்த்து, அந்த நாள் முதல், இந்த நிருபத்தை எழுதின அந்த சமயம் வரையிலான தனது கிறிஸ்தவ வாழ்க்கையை எண்ணி சீர் தூக்கிப்பார்க்கிறார். கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கிறார். தன்னுடைய ஊழியத்தின் காரியங்களை அலசிப்பார்க்கிறார். எதிர் வந்த சோதனைகளை நினைத்துப் பார்க்கிறார். பட்ட பாடுகளை பட்டியலிட்டு பார்க்கிறார், கிறிஸ்துவினிமித்தம், தான் விட்டு வந்த காரியங்களிலும் லேசாக மனதை செலுத்துகிறார். அத்தோடு, தான் இனி என்ன செய்ய வேண்டுமென்பதையும் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். இந்த தற்பரிசோதனையின் முடிவில் அவர் ஓர் உண்மையை தெரிந்து கொண்டு, ஒரு திடமான முடிவுக்கு வந்து சேர்கிறார்.

பவுலாகிய அவர், இன்னும் அடைய வேண்டியதை அடையவில்லை என்பதும், தேற வேண்டியதில், தேற வேண்டிய அளவுக்கு தேறவில்லை என்பதும், பிடித்துக் கொள்ள வேண்டியதை இன்னும் பிடிக்கவில்லை என்பதுமே அவ்வுண்மை, இந்த இடத்தில் தான் அம் மாமனிதர் சொல்லுகிறார். "**ஒன்று செய்கிறேன்**" என்று. கிறிஸ்துவுக்காக, அவர் நாமத்திற்காக, அவர் தம் சுவிசேஷத்திற்காக அவர் கட்டின ஒன்றான மெய்ச் சபைக்காக, எத்தனையோ, எத்தனையெத்தனையோ செய்த இந்த மகா கிறிஸ்தவன், தாழ்மையாக அடக்கமாக, பவ்வியமாக, "**ஒன்று செய்கிறேன்**" என்று சொல்லுகிறார். இப்படிச் சொல்வதன் மூலம், அந்த பரம அழைப்பின் "பந்தயப் பொருளுக்காகத்" தான் இனி செய்ய வேண்டியது இது தான் என்று கோடிட்டுக் காட்டுகிறார்.

"ஒன்று செய்கிறேன்" என்று சொன்ன பவுல், அந்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக என்ன செய்தார் என்பதை கொஞ்சம் விபரமாக நாமும் தெரிந்து கொண்டால், அந்த பந்தயப் பொருளை நாம் இழந்து போகாமல் பெற்றுக் கொள்வதற்குப் பேருதவியாய் இருக்கும். ஆகவே அவைகளைக் குறித்து கீழே காண்போம்.

## I. பவுல் பின்னானவைகளை மறந்தார்

தன் ஆன்மீக நிலையை உய்த்துப் பார்த்து ஒன்று செய்கிறேன் என்று தீர்மானித்து, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக, பவுல் செய்த முதல் காரியம், "**பின்னானவைகளை மறந்தது**".

பின்னானவைகள் எதையும் மறக்காமல், அவைகளை அப்படியே மனதில் தேக்கி வைத்து, அவைகளிலேயே திளைத்திருக்க வேண்டுமானால் அப்படிச்செய்தவற்கு பவுலடியாருக்கு ஏராளமான காரணங்கள் இருந்தது, பெருமைக்குரிய அக்காரணங்களைத், தானே பட்டியலிட்டு காட்டியுள்ளார் (வசனம் 5,6). ஆனாலும் அவைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணி மறந்தார். பொதுவாக, அனுகூலமாயிராதவைகளை, லாபமாயிராதவைகளை மறப்பது ஒருவனுக்கு சுலபம். ஆனால், பெருமைக்கும், மரியாதைக் குமுரியவைகளாயிருந்தவைகளை மறப்பதோ, விட்டுவிடுவதோ லேசான காரியமல்ல. ஆனால், அவர் யூதனாயிருந்த போது, லாபமாயிருந்த அனைத்தையும், பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக மறக்க முடிவெடுத்தார்.

இன்னும், அவர் கிறிஸ்தவனாக மாறியதற்குப் பிறகும் கூட, அவர் ஓர் அப்போஸ்தலன் என்றளவில், கிறிஸ்துவுக்காகவும், அவருடைய சபைக்காகவும் செய்த அநேக காரியங்களைக் குறித்து அவர் பெருமைப்படுவதற்கும் காரணங்கள் எக்கச்சக்கமாக இருந்தது. கிறிஸ்துவுக்காக பட்டபாடுகள் போதும், அனுபவித்த வேதனைகள் போதும், சந்தித்த அவமானங்கள் போதும், இனி கொஞ்சகாலம், ஓய்வெடுக்கலாம் என்று அவர் நினைத்திருந்தால் கூட, அதிலே பெரிய தவறில்லை என்ற நிலையே அவருக்கு இருந்தது.

ஆனால், அப்போஸ்தலன் பவுலோ, பக்தி வைராக்கியத்தின்படி ஒரு பெருமைக்குரிய யூதனாக வாழ்ந்ததையும், பிரத்யேகமாக அழைக்கப்பட்டு, அப்போஸ்தலன் என்றளவில் கிறிஸ்துவுக்காகச் செய்த அனைத்தையும், அந்தப் பந்தயப் பொருளுக்காக மறக்கிறார். இதை அவர் யாரிடத்திலே கற்றுக்கொண்டிருக்க முடியும்? கண்டிப்பாகக் கிறிஸ்துவினிடமிருந்து தான். ஆம், இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து, அந்த கெத்சமனேயில் ஜெபித்த போது, தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக இப்பூமியில் அவர் செய்த எதையும் சொல்லி ஜெபிக்காமல், அதாவது, சாத்தானை எதிர்த்து வெற்றி கண்டது, அற்புதங்கள் நிகழ்த்தியது, உவமைகளைக் கொண்டு பிரசங்கித்தது,

பாவங்களை மன்னித்தது என்று எதையும் சொல்லாமல், பிதாவின் சித்தம் நிறைவேற, தன்னை ஒப்புக்கொடுத்தே ஜெபித்தார், பின்னானவைகளை மறந்தார்.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே, நம்முடைய நிலை எப்படியுள்ளது? பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக, எத்தனை பேர் பின்னானவைகளை மறக்க ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோம்? அதாவது, நமக்கு லாபமாயிருப்பவைகளை விட்டுவிட எத்தனை பேர் தயாராயிருக்கிறோம்? இன்றைய கிறிஸ்தவத்தின் யதார்த்த நிலை உங்களுக்குத் தெரியுமா? யாரும், எதையும் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்து தரும் பந்தயப் பொருளுக்காக விட்டு விடத் தயார் இல்லை என்பதுதான்! இது ஒரு கசப்பான உண்மை. ஆம், பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காகத் தங்கள் பாரம்பரியத்தை விட்டுவிடவோ, தேவ திட்டத்துக்கு விரோதமாக மனிதர்களால் கட்டப்பட்ட சபைப் பிரிவுகளை விட்டு விலகவோ, இந்தப் பிரிவுச் சபைகளில் தாங்கள் வகிக்கும் பதவிகளை தூக்கி எறியவோ, அவைகளின் மூலமாகக் கிடைக்கும் சில சலுகைகளை அற்பமாய் எண்ணவோ பெரும்பாலானவர்கள் தயாராக இல்லை.

ஆனால், பாவம் உட்பட தாங்கள் அனுபவிக்கும் எதையும் விட்டு விலகாமல், லஞ்ச லாவண்யம் உட்பட தங்களுக்கு இலாபமாக இருக்கும் யாதொன்றையும் விட்டுவிடாமல், பரம அழைப்பின் பந்தயப் பொருள் மாத்திரம் கிடைக்க வேண்டும் என்று அநேகர் ஆசைப்படுகின்றனர். அப்படிப்பட்ட ஆசை, நிராசையாகவே போகும் என்பதை தயவாய் அறிந்து கொள்ளுங்கள். ஆம், பரம அழைப்பின் பந்தய பொருள், போகிற போக்கில் பெற்றுக்கொள்கின்ற ஒன்றல்ல. கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஓர் அப்பழுக்கற்ற கிறிஸ்தவனாக வாழ்ந்து கொண்டிருந்த, பவுலடியாரே, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக, பின்னானவைகளை மறப்பது அவசியமானால், நானும் நீங்களும் பின்னானவைகளை மறப்பது எவ்வளவு **அத்தியாவசியம்** என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஆகவே, கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் மாறாகத் தெரிகின்ற "பின்னானவைகள்" எதுவாக இருந்தாலும் , அவைகள் எவ்வளவு லாபமான காரியமாக இருந்தாலும், அவைகளை உடனடியாக மறந்து, பந்தயப் பொருளுக்காக நம்மை ஆயத்தமாக்குவோம்.

**II பவுல் முன்னானவைகளை நாடினார்.**

தன் ஆன்மீக நிலையை உய்த்துப் பார்த்து, "ஒன்று செய்கிறேன்" என்று தீர்மானித்து, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக, பவுல் செய்த இரண்டாவது காரியம், "முன்னானவைகளை நாடுவது".

"முன்னானவைகளை நாடுகிறேன்" என்று அப்போஸ்தலன்

சொல்லும்போதே, ஒரு காரியம் நமக்கு நன்றாக விளங்க வேண்டும். அது யாதெனில் சுமார் 30 ஆண்டு காலம் சுத்த கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்த பவுலுக்கே, முன்னோக்கி நாட வேண்டிய காரியங்கள் இன்னும் இருந்திருக்கிறதென்பது.

இங்கே, முன்னானவைகளை நாடுதல் என்பதற்கு மூல பாஷையாகிய கிரேக்கத்திலே பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைக்கான பொருள், மிகவும் ஆழமானதாகவும், அர்த்தம் செறிந்ததாகவும் இருக்கிறது. ஓர் ஓட்டப் பந்தய வீரன், கடக்க வேண்டிய தூரத்தை கிட்டத்தட்ட முடித்து வெற்றிக்கான எல்லைக் கோட்டை நெருங்கும் போது, எப்படி தன் நாடி நரம்புகளை எல்லாம் வருத்தி, மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க, அந்த வெற்றி இலக்கை அடைவதற்க்கு பகீரதப் பிரயத்தனம் செய்வானோ, அப்படிப்பட்ட பிரயாசத்திற்கு இது ஒப்பிடப்படுகிறது. "அய்யோ! அப்படியானால் பந்தயப் பொருளுக்காக" பவுல், எவ்வளவு பிரயாசை எடுக்கிறார் என்பதைத் தயவாய் கவனியுங்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கை எப்பொழுதுமே, முன்னானவைகளை நாடும் ஒரு வாழ்க்கை தான். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சீஷத்துவத்திற்கான விலையைக் குறித்து பேசும்போது, இவ்விதம் சொல்லியுள்ளார். "அதற்கு இயேசு: கலப்பையின் மேல் தன் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்ஜியத்துக்குத் தகுதி உள்ளவன் அல்ல" என்று (லூக் 9:62). ஆம், தேவனுடைய ராஜ்ஜியத்துக்கு தகுதியாக வேண்டுமானால், பரம அழைப்பின் பந்தய பொருளை பெற்றுக் கொள்ள வேண்டுமானல், முன்னானவைகளை நாடுகிறவர்களாய் இருக்க வேண்டும்.

அதுவும் எப்படி? பவுலடியார் போல், வெற்றிக் கோட்டை நெருங்கும், ஓர் ஓட்டப் பந்தய வீரனைப் போல், மிகுந்த பிரயாசையோடு, வாஞ்சையோடு, அடைந்தே ஆகவேண்டுமென்றதொரு வைராக்கியத்தோடு நாடவேண்டும். பரம அழைப்பின் பந்தய பொருளுக்காக பவுல் அப்படித்தான் செய்தார். ஆகவே, நாமும், பவுலடியாரைப் போல், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுவோமாக!

## III. பவுல் இலக்கை நோக்கித் தொடர்ந்தார்.

தன் ஆன்மீக நிலையை உய்த்துப் பார்த்து, "ஒன்று செய்கிறேன்" என்று தீர்மானித்து, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக, பவுல் செய்த மூன்றாவது காரியம், "இலக்கை நோக்கித் தொடருதல்".

பவுலடியார் இங்கு இரண்டு காரியங்களைக் கோடிட்டுக் காட்டுகிறார். 1. இலக்கு, 2. தொடருதல். "பாவம்" என்ற வார்த்தைக்கான பொருள் "குறிதப்பல்" அல்லது "இலக்கு தவறுதல்" என்பது. ஆதியிலே தேவன், மனிதனை ஒரு இலக்கை நோக்கி பயணம் செய்யும்படியாகவே

படைத்தார். ஆனால், அவன் பாவம் செய்தபோது, "இலக்கை தவறவிட்டான்". தவறவிடப்பட்ட இலக்கு, இயேசு கிறிஸ்துவினாலே மீட்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தினாலே கழுவப்படுகின்ற எல்லோரும் அந்த இலக்கை நோக்கி பயணிக்கும் படியான பாக்கியத்தை பெறுகின்றனர். ஆனாலும், தேவ திட்டத்தின் படியான இலக்கை கண்டுபிடிக்க முடியாமல், ஏராளமானவர்கள் இன்னும் பாவ இருளில் தடுமாறிக் கொண்டுள்ளனர். குருட்டாட்டமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டுள்ளனர். இன்னும் சிலர், அந்த இலக்கு எது என்று தெரிந்தும், அதற்காகத் தங்களை வேத வசனங்களினடிப்படையில் ஆயத்தம் செய்யாமல், பொய்யான உபதேசங்களில் சிக்கி சீரழிந்து கொண்டுள்ளனர்.

ஆனால், கிறிஸ்து இயேசுவினால் பிடிக்கப்பட்டு, இலக்கை கண்டுபிடித்த பவுலடியாரோ, அதை நோக்கித் தொடருகிறார். "தொடருதல்" என்ற வார்த்தையின் பொருள், "ஆசையோடும், ஆவலோடும், கவனத்தோடும் ஒன்றைப் பின்பற்றுவதாகும்". ஆக, இங்கே பவுல், இலக்கை நோக்கி, இலக்காகிய பரம கானானை நோக்கி, இயேசு நடந்த பாதையிலே அடிஅடியாக காலெடுத்து வைத்து முன்னேறுகிறார். "தொடருதல்" என்பதின் இன்னொரு பொருள் "ஒன்றை அடையும் வரை சென்று கொண்டே இருப்பதாகும்". இந்தப் பொருளோடுதான் பவுல் தொடருகிறேன் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். அப்படியானால் நம்முடைய நிலை எப்படியிருக்கிறது? ஆசையும், ஆர்வமும், கவனமும், விடாமுயற்சியும் நம்மிடம் இருக்கிறதா? சொல்லுங்கள். இதே கருத்தை, எபிரேயருக்கு எழுதும்போது அதன் ஆசிரியர் இந்த விதமாகச் சொல்லுகிறார். "...விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற **இயேசுவை நோக்கி** நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்". (எபி.12:1) என்று.

அருமையானவர்களே, இன்றைக்கு கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிற எத்தனை பேர் அல்லது கிறிஸ்தவர்களாக வாழ விரும்பும் எத்தனை பேர், பரம அழைப்பின் பந்தய பொருளுக்காக, அப்போஸ்தலன் பவுல் போல், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி, இலக்கை நோக்கித் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்? அல்லது இயேசுவை நோக்கி, நியமித்திருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடே ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அட, மற்றவர்களை விடுங்கள். நீங்கள், இலக்கை நோக்கியும், இயேசுவை நோக்கியும் போய்க் கொண்டிருக்கிறீர்களா?

இலக்கை நோக்கியும், இயேசுவை நோக்கியும் போவதென்றால் என்ன? இதே அதிகாரத்தின் 20ம் வசனத்தில், நம்முடைய குடியிருப்பு

பரலோகம் என்று பவுல் சொல்லுகிறார். ஆகவே, அந்த பரலோகம் நோக்கிச் செல்வதுதான், இலக்கை நோக்கியும், இயேசுவை நோக்கியும் செல்ல வேண்டும் என்பதின் பொருள். அப்படியானால், பரலோக பயணத்திற்கு நாம் செய்ய வேண்டியதென்ன? மனிதர்களின் உபதேசங்களை அல்ல இயேசுவின் உபதேசத்தை மாத்திரம் நாம் நோக்க வேண்டும். (கொலோ 3:16) மனிதர்களின் பெயரில் உள்ள சபைப் பிரிவுகளையல்ல இயேசு கிறிஸ்து கட்டின சபையை மாத்திரம் நாம் நோக்க வேண்டும் (மத்.16:18).

கிறிஸ்துவின் உபதேசத்தை நாடாமல், மனிதர்களின் விதவிதமான உபதேசங்களில் நாட்டம் செலுத்திக் கொண்டும், இயேசு வாக்களித்து (மத்.16:18), பிரசங்கித்து (மத். 4:17) இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையில் அங்கம் வகிக்காமல் (அப். 20:28), மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட போலி சபைப் பிரிவுகளில் அங்கம் வகித்துக் கொண்டும், ஒருவன் நான் இலக்கை நோக்கித் தொடர்கிறேன், இயேசுவை நோக்கிப் போகிறேன் என்று சொன்னால் அது பிதற்றல். தன்னைத் தானே ஏமாற்றுகிற ஒரு செயல்.

I கொரி. 11:1-ல், நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்கள் என்னை பின்பற்றுங்கள் என்று பவுல் கூறுகிறார். மற்ற எல்லா விஷயங்கள் போலவே, பந்தயப் பொருள் விஷயத்திலும் நாம் அவரைப் பின்பற்ற கடமைப் பட்டுள்ளோம். அப்படியானால், நாம் ஒவ்வொருவரும் அப்போஸ்தலன் பவுல் போல, “பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக”, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, இலக்கை நோக்கிப் பயணத்தைத் தொடர வேண்டும். அப்படித் தொடர பரலோகத்தின் தேவன் நமக்கு இரக்கங் கட்டளையிடுவாராக! ஆமென்!!

**S. ராஜநாயகம்.**

# வேதாகமத்தின் செய்தி

1) **"கிறிஸ்து வருகிறார்"** இது பழைய ஏற்பாட்டின் பக்கங்களின் செய்தி

2) **"கிறிஸ்து வந்திருக்கிறார்"** இது புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நூல்களின் செய்தி

3) **"கிறிஸ்து மீண்டும் வருவார்"** இது புதிய ஏற்பாட்டிலுள்ள மற்ற 23 புத்தகங்களின் செய்தி.

# பிலிப்பி பட்டணம் பற்றி ...

முதலில் கவாலா என்று அழைக்கப்பட்ட இப்பட்டணத்தை, மகா அலெக்சாண்டரின் தகப்பன் மாசிடனின் பிலிப்பு என்பவர் 4வது நூற்றாண்டில் (கி.மு.) திரேசியன் என்பவன் வசமிருந்து கைப்பற்றி அதற்கு தன்னுடைய பெயரை சூட்டினான். ரோமாபுரிக்கும், ஆசியாவிற்கும் மத்தியில் செல்லும் எக்நேசன் நெடுஞ்சாலையில் இப்பட்டணம் அமைந்திருக்கிறது. மகா அலெக்சாண்டர் உலகத்தையே தன் ஆட்சியின் கீழ் கொண்டுவருவதன் முதன் படிக்கல்லாக இது அமைந்திருந்தது. ரோமர்கள் 162 கி.பியிலும், 42 கி.பியிலும் இப்பட்டணத்தின் மேல் படை எடுத்து அதை தங்கள் வசமாக்கினார்கள்.

"மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று" (அப். 16:9) பவுலிடம் கேட்டுக் கொள்ளப்பட்டவுடன், அவர் முதல் முதலில் வந்தது இப்பட்டணத்திற்குத்தான். அப்பட்டணத்தின் ஆற்றோரம் அவர் பிரசங்கம் செய்தார், சிறைக்குச் சென்றார், ஐரோப்பாவில் முதலாவதும், அவருக்கு நெருக்கமானதுமான சபையை அங்கு ஸ்தாபித்தார்.

கி.பி. 1914 முதல் 1938 வரை ஏதேன்ஸின் பிரெஞ்ச் பள்ளி புதை பொருள் ஆராய்ச்சி செய்தது. அதில் அப்பட்டணத்தின் சந்தை, நூலகம், நாடகம் நடைபெறும் இடம், சொற்பொழிவு நடத்தப்படும் செவ்வக கட்டடம் முதலானவை கண்டுபிடிக்கப்பட்டது. இப்பட்டணத்தின் வடகிழக்குப் பகுதியில் தான் ஒரு ஆறு இருப்பதாகவும் அப்பகுதியில் தான் எக்நேசன் நெடுஞ்சாலையும் அமைந்திருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டு, இதன் வழியில்தான் பவுல் இப்பட்டணத்திற்கு வந்திருக்கக் கூடும் என்றும் யூகிக்கப்படுகிறது.

# புதிய ஏற்பாட்டு சபை

சபையைக் குறித்த உண்மையை நாம் அறிய வேண்டுமானால், புதிய ஏற்பாட்டில் தான் நாம் அதைக் கண்டுபிடிக்க இயலும். தீர்க்கதரிசனமாக அது குறித்து பேசப்பட்டிருந்தாலும், அதன் நிறைவேற்றத்தைக் காண கிறிஸ்துவின் போதனைகளுக்குத்தான் நாம் செல்ல வேண்டும்.

மனிதன் சபையைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறான் என்பதை அறிய நமக்கு ஆர்வமில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். வசனங்கள் என்ன சொல்லுகின்றன என்பதைக் காண்போம். ஆரம்பிப்போமா?

1. கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார். அவரே சொல்லும்போது, "...... இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது" என்றார். (மத்தேயு 16:18). அவர் தமது சபையைக் கட்டுவதாக கூறினதைக் கவனியுங்கள். எனவே, சபை அவருக்குரியது.

2. சபையின் துவக்கம் எருசலேமில் இடம்பெற்றது. கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டு, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமில் காத்திருங்கள் என்றும், மனம்திரும்புதலும், பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல நாடுகளுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியது" (லூக்கா 24:46-48). இது எப்படி நிறைவேறியது என்பதை அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

3. அது கி.பி. 33-ல் துவக்கம் பெற்றது. கிறிஸ்து உயிர்த்தெழுந்து ஐம்பது நாட்களுக்குப் பிறகு சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதாவது, அவர் உயிர்த்தெழுந்த பின் முதல் பெந்தெகொஸ்தே நாளன்று ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 2).

4. அது ஸ்தாபகராகிய கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக்கொள்கிறது. பவுல் ரோமாபுரியில் இருந்து சபைக்கு எழுதும்போது, பிற சபைகளிலிருந்தும் வாழ்த்துக்களை தெரியப்படுத்துகிறார். இப்படியாகத்தான், "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று குறிப்பிட்டார். (ரோமர்.16:16) 1கொரிந்தியர் 12:27-ல் கிறிஸ்துவின் சரீரத்தைக் குறித்து பேசும்போது, அது கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிட்டார். (கொலோசேயர் 1:18). கிறிஸ்து அதை ஸ்தாபித்திருந்தால், இயல்பாகவே அது கிறிஸ்துவின் சபையென்று அழைக்கப்படும். வேறு எதுவாகவோ இருந்து கொண்டு, அது எப்படி கிறிஸ்துவுக்குரியதாகும்?

5. அதன் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று மாத்திரமே அழைக்கப்பட்டனர். அப்போஸ்தலர் 11:26-ல் அந்தியோகியாவில் முதன் முதலில் கிறிஸ்தவன் என்ற பெயரில் வழங்கிற்று. இது தெய்வீகத்தின் அனுமதியில் தான் நிகழ்ந்தது என்று நாம் அறிவோம், ஏனெனில் பின்னதாக பேதுரு சொல்லும்போது, கிறிஸ்தவன் என்னும் நாமத்தினால் கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட வேண்டும் என்று பேதுரு கூறினார். (1பேதுரு 4:16).

6. தாம் சபைக்காக மரிக்கவேண்டும் என்ற அளவுக்கு அதை அவர் நேசித்தார்.

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, .........தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். (எபேசியர். 5:25).

7. அது கிறிஸ்துவின் இரத்தத்தால் கிரயத்திற்கு வாங்கப்பட்டது. பவுல் எபேசு பட்டணத்தில் இருந்த சபையின் மூப்பர்களினிடத்தில் கூறும்போது, ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்," (அப்போஸ்தலர் 20:28) என்றார்.

8. ஒரு சபை மாத்திரமே உண்டு. தேவனுடைய வசனம் சொல்லுகிறது, "ஒரே சரீரமும்......... உண்டு" (எபேசியர் 4:4), சரீரம் சபையாய் இருக்கிறது (எபேசியர் 1:22,23; கொலோசியர் 1:18). எனவே ஒரே சரீரம் இருக்குமாயின் ஒரே சபைதான் இருக்கக்கூடும். அவ்வளவுதான்.

9. கிறிஸ்து இதன் தலையாயிருக்கிறார். "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேரானவர்." (கொலோசேயர் 1:18). இந்தத் தலைமைத்துவத்தை அவர் யாருடனும் பகிர்ந்து கொள்வதில்லை.

10. கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறார். "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்." (எபேசியர் 5:23).

11. இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் தமது சபையில் சேர்க்கிறார். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று வேதம் சொல்லுகிறது. (மாற்கு.16:16), பிறகு பவுல் சொல்லும்போது, விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளும் சபைக்குள்ளும் நுழைகின்றனர். (கலாத்தியர் 3:26,27;1கொரிந்தியர் 12:13). இன்னொரு வார்த்தையில் சொல்லப்போனால் பெந்தெகொஸ்தே நாளில் பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பிறகு "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப்போஸ்தலர் 2:47).

12. கிறிஸ்து ஒரு நாளிலே தமது மணவாட்டியாகிய சபைக்காக வருவார். "கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்." (எபேசியர் 5:27). அவருக்கு தம் நாமம் தரித்த மணவாட்டியாகிய ஒரே ஒரு சபை மாத்திரமே உண்டு. மேலும் அதற்காகவே அவர், வருகிறார்.

புதிய ஏற்பாட்டில் நீங்கள் வாசிக்கிற சபையில்தான் அங்கத்தினராக இருக்கிறீர்களா? அப்படி இல்லையாயின், பிறகு எப்படி நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருக்க முடியும்? அவைகளைக் குறித்து சிந்தியுங்கள். அருகிலுள்ள கிறிஸ்துவின் சபைக்கு விஜயம் செய்யுங்கள்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

# "அவள் ஒரு சீஷி"

"புதிய ஏற்பாட்டின் திறவுகோல்" என்றழைக்கப்படும் அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தின் ஆசிரியர் மருத்துவர் லூக்கா. 4 சுவிசேஷங்களில் ஒன்றான "லூக்கா" சுவிசேஷத்தின் ஆசிரியரும் இவரே.

இந்த அப்போஸ்தலர் நடபடிகளில் சப்பீராள், தொற்காள், லீதியாள், பிரிஸ்கில்லா போன்ற பெண்மணிகளின் பெயர்கள் இடம் பெற்றிருந்தாலும், சப்பீராள் அழிவுக்கு உடந்தையாயிருந்த பெண் என்பதற்கு உதாரணமாக இருக்கிறாள். "தொற்காள்" என்ற அம்மா பெண்களால் ஆகும் என்பதற்கு உதாரணமாக திகழ்கிறார்கள். இந்த அம்மா பற்றிய சம்பவம் அப்போஸ்தலர் 9ம் அதிகாரம் 36 முதல் 43 முடிய உள்ள வசனப் பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

"தொற்காள்" அல்லது "தபீத்தாள்" என்று, இவள் அழைக்கப்படுகிறாள். சீரிய பாஷையில் தபீத்தாள் என்பதற்கு "மான்" என்று அர்த்தம். கிரேக்கர்கள் அதே அர்த்தங்கொள்ளும் "தொற்காள்" என்னும் பெயரை இவளுக்கு வழங்கி வந்தனர். இவள் "யோப்பா" என்னும் துறைமுகப் பட்டணத்தில் வசித்த தர்மகுணமுள்ள ஒரு கிறிஸ்தவள். பேதுரு அப்போஸ்தலன் செய்த ஜெபத்தினாலே மரித்துப்போன இவளுக்கு திரும்பவும் உயிர் வந்தது. இதுதான் தொற்காள் அம்மா பற்றிய மேலோட்டமான தகவல். இந்தமாதம் இந்த அம்மாவின் மூலம் நமக்கு பிரயோஜனமான சில கருத்துக்களை வேதத்தின் துணைகொண்டு ஆராய்வோம்.

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து, மனிதவதாரம் எடுத்து, இப்பூவுலகில் பிறந்து 33 1/2 ஆண்டுகள் வாழ்ந்தார். அதில் இறுதி 3 1/2 ஆண்டுகள் ஊழிய காரியங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். அந்த நாட்களில் அவர் உபதேசித்தும், அற்புதங்கள் செய்தும், மக்கள் மேல் மனதுருக்கம் உள்ளவராய் இருந்தார். தம்முடைய ஊழிய நாட்களில் மரித்துப்போன மூன்றுபேரை உயிரோடு எழுப்பினார். அவர்கள்,

யவீருவின் மகள் – (மாற் 5:22,23,35-43, லூக் 8:41,42,49-56)
நாயீன் ஊர் வாலிபன் – (லூக் 7:11-15)
லாசரு – (யோவா 11:1-45)

நமதாண்டவர் இயேசுக்கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்த பிறகு, அற்புத வல்லமை அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலனாகிய பவுல் "ஐத்திகு" என்ற மரித்துப்போன வாலிபனை உயிரோடு எழுப்பினார். அப்போஸ்தலனாகிய பேதுரு, "தொற்காளை" உயிரோடு எழுப்பினார்.

இந்த தொற்காள் திருமணமானவளா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் மரித்தும், உயிரோடு எழுந்தவள் இந்த தொற்காள்.

அப்போஸ்தலர்:9:36 **யோப்பா பட்டணத்தில் கிரேக்கு பாஷையிலே தொற்காள்**

**என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள், அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்** என்று சொல்லுகிறது. தொற்காள் ஒரு சீஷி. சீஷன், சீஷி என்ற வார்த்தைக்கு "பின்பற்றுகிறவர்கள்" என்று பொருள். இந்த தொற்காள் தொடர்ந்து கற்றுக்கொண்டேயிருக்கிறாள். கற்றுக்கொள்ளல் என்பது முடிவில்லாத ஒரு செயல். தொற்காள் வயது சென்றவளாய் இருந்தாள். ஆனாலும் கற்றுக்கொண்டேயிருந்து பின்பற்றியதால் வேதம் இவளை "சீஷி" என்று அழைக்கிறது. கலாத்தியர்.3:28-ல் பார்க்கிறபடி ஆணென்றும், பெண்ணென்றுமில்லை. ஆண்கள் தான் அவரைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. பெண்களாகிய நாமும் அவரைப் பின்பற்றி, அவர் கூறியவற்றை கற்றுக்கொண்டு சீஷிகளாய் இருப்பது அவசியம். "தொற்காள்" சீஷி என்ற பெயரைப் பெற்று நமக்கு முன் உதாரணமாய் இருக்கிறார்கள். அத்தோடு அவர்கள் நின்றுவிடவில்லை. நற்கிரியைகளையும், தர்மங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டும் வந்தார்கள் என்று வாசிக்கிறோம். நாமும் சில வேளைகளில் நற்கிரியை, தர்மங்கள் செய்கிறோம், ஆனால், "மிகுதி" என்ற வார்த்தையில் நாமும் தொற்காளும் வேறுபடுகிறோம்.

"மிகுதி" என்பதற்கு அதிகமான அளவில் என்று சொல்லலாம். எந்தக் குறைவும் இல்லாமல் செய்து வந்தாள். "மிகுதி" என்பதற்கு நிறைவு என்றும் பொருள் உண்டு. (மீகா.3:8) யோவான்.11:14-ல் "நிறைந்தவராய்" என்ற வார்த்தையை படிக்கிறோம். அப்போஸ்தலர்.6:8 வசனத்திலும் நிறைந்தவளாய் என்று வாசிக்கிறோம். ஆக, மிகுதி என்பதற்கு குறைவில்லாமல், நிறைவாய் செய்து என்பது பொருள். பெண்களில் நமக்கு இருக்க வேண்டிய அளவுக்கு நற்கிரியை நம்மிடத்தில் இல்லை. உண்மைதான். நாம் ஒத்துக் கொள்ள வேண்டிய ஒன்று. தொற்காள், தான் இருந்த இடத்திலேயே சத்தமில்லாமல் காரியங்களை செய்தாள். உண்மையாய் செய்தாள். மிகுதியாயும், முழு மனதுடனும் செய்தபடியால், அவள் செயல் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது. நாமும் கூட நற்கிரியைகளை மிகுதியாகச் செய்ய பழகு வேண்டும்.

பிலி. 1:5 "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுக்கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி".

தீத்து 2:14 "... நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கிய முள்ளவர்களாயும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காக தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார் ....". என்றுள்ளது.

ஆனால், அப். 9:37ம் வசனம் :- அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். என்று சொல்கிறது. நல்லவர்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்? யோபுவின் புத்தகத்தில் இதே கேள்வி கேட்கப்படுகிறது. யோபு.23;3,4 ஆகிய வசனப் பகுதிகளை வாசிக்கும் போது யோபுவின் மனநிலையை நாம் புரிந்து கொள்ளமுடியும். ஏன், ஏன், ஏன் என்ற கேள்வியை கேட்பேன் என்கிறான், சங்.73-ல் தாவீதும் இப்படியே புலம்புகிறான். இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டியது யாதெனில் குறையும் பிரச்சினையும் ஒருவனுடைய பக்திக்கு அளவுகோல் அல்ல.

தொற்காள் நல்லவள்தான். அவளுக்கு வியாதி வந்து, மரித்துப் போனாள்..

வேத வல்லுநர்கள் கூறும்போது, "பிறருக்காக உழைத்து, உழைத்து சரீரம் கெட்டுப் போயிருக்கும்" என்கிறார்கள். எது எப்படியிருப்பினும் இந்த சரீரம் ஒரு நாளைக்கு அழிந்து போகக் கூடியதே. அதற்காகத்தான் படைக்கப்பட்டது. ஆனால் நம் கிரியைகளை ஒருக்காலும் அழிக்க முடியாது. அவைகள் தான், தேவ சமுகத்தில் போய் நிற்கும். 2.தீமோ.4;20-ல் பவுலின் அங்கலாய்ப்பை பார்க்கிறோம். துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன் என்கிறார். ஏன் மரித்த ஐத்திகுவை உயிரோடு எழுப்பிய அப்போஸ்தலனாகிய பவுலுக்கு, துரோப்பீமுவுக்கு சுகம் கொடுக்க இயலாதா? இந்த சரீரமானது பலவீனத்தையும், வியாதியையும் சந்தித்தே ஆக வேண்டும். இன்றைக்கும் அற்புத ஊழியம் என்ற பெயரில், "கிறிஸ்துவண்டை வாருங்கள், வியாதி, பிரச்சினை, கடன் தொல்லை யாவும் நீங்கும் என்று" பறைசாற்றித் திரிகிறார்களே, அது பொய். வசனத்திற்கு விரோதமானது. அப்படியென்றால், தொற்காளுக்கு வியாதி வந்திருக்கக் கூடாதே. கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! யாக்கோபு 1;3,4 பரீட்சையானது, பொறுமையை உண்டாக்கும் என்று கூறுகிறது.

தொற்காளைப் போன்று மரணமடைந்தவர்களைப் பற்றிக் கூறும்போது வெளி.14:13-ல் **"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்"** என்று வாசிக்கிறோம். தொற்காள் கர்த்தருக்குள் மரித்தாள். எனவே அவள் "பாக்கியவதி".

அப். 9:39ம் வசனம் :- தொற்காள் இல்லாமல் நாங்கள் எப்படி இருப்போம் என்று ஏழைகளும், விதவைகளும் உணர்ந்து பேதுருவினிடம் மன்றாடுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு, அப்பொழுது லித்தா என்ற ஊரில் இருந்தார். லித்தா ஊரிலிருந்து யோப்பா பட்டணத்திற்கு கிட்டத்தட்ட 10 மைல் தொலைவு. தாமதமில்லாமல் தங்களிடத்திற்கு வரவேண்டுமென்று இரண்டுபேரை அவனிடத்திற்கு அனுப்புகிறார்கள். பேதுரு வந்தவுடன் அவள் தயாரித்த ஆடைகளை காட்டி கண்ணீர் விடுகின்றனர். இதிலிருந்து தொற்காளுக்கும், மக்களுக்கும் இடையே இருக்கும் நெருக்கமான அன்பு நமக்கு புரிகிறது. அவ்வாறு அந்த மக்கள் செயல்படுவதற்கு காரணம் தொற்காள் செய்து வந்த "மிகுதியான" தானதர்மங்கள் தான்.

பேதுரு ஜெபித்தான். இயேசுகிறிஸ்து மரித்தவர்களை உயிரோடு எழுப்பினபோது பேதுரு இயேசுவுடன்கூட இருந்தான். ஒருவேளை அவன் பாரப்பட்டு ஜெபித்திருப்பான். தொற்காளுக்கு உயிர் வந்தது.

இதை வாசிக்கும் சகோதரிகளே! நற்கிரியைகளுக்கு முன் உதாரணமாக தொற்காள் திகழ்கிறாள். தனி ஒரு பெண் மக்கள் மத்தியில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறாள் என்பதை பாருங்கள். கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருடைய சபையில் இருக்கும் நாமும் நற்கிரியைகளின் மூலம் ஊழியம் செய்வோம். தான தர்மங்கள் செய்வோம், அதுவே பிதாவாகிய தேவனுடைய முன்னிலையில் மாசில்லாத, சுத்தமான பக்தியாய் இருக்கும். அப்படிச் செய்ய தேவன் தாமே உதவி செய்வாராக! ஆமென்!

**ரேச்சல் ராஜநாயகம்.**

# உங்களுக்கு ஒரு பரிசு

அன்னையின் வயிற்றில் உருப்பெற்று, அவனியில் பிறந்த குழந்தையைக் காண உற்றார், உறவார், நண்பர்கள் நட்பால் நயப்புடன் நலம் விசாரிக்க வருவர், வருவோர் புதிதாய் இவ்வுலகிற்கு வந்த பச்சிளங்குழந்தைக்கு பரிசுகள் பல வாங்கித் தருவர், அதுமுதல் ஜகத்தினில் ஜனனநாள் காணும்போதெல்லாம் பரிசு கிட்டும், இல்லாவிட்டாலும் வாழ்த்தாவது, நமக்கு வந்தடையும், ஜென்மநாள் கண்ட நாம், வளர்ந்து, வாலிபம் அடைந்து, விவாக வயதை எட்டி, மணமுடிக்கும் வேளையிலும் பரிசுகள் வந்து பனிமழையாய் குவிந்து விடுவது வழக்கம், இப்படி மனித வாழ்க்கையில் சிறந்த நிகழ்வுகளிலும், சிரமங்கள் பல கடந்து சிகரங்களை எட்டும் போதும் வாழ்த்துகளும் பரிசுகளும் வந்து சேரும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

இளவயதின் நாட்களை இனிதே நகர்த்தும் அன்பான வாலிபர்களே, இவ்வுலக பரிசுகளையும், வாழ்த்துகளையும் பற்றி நாம் சிந்திக்கப்போவதில்லை, இவையெல்லாம் நிலையானவையல்ல, பாவப் படுகுழியில் விழுந்து, மாளும் நிலையிலிருந்த மனிதகுலத்திற்கு, மாசுமருவற்ற, பரிசுத்தமான, பரலோகப் பரிசை பாசமுடன் பட்சபாதமில்லாமல் மனிதகுலம் அனைத்தையும் இரட்சிக்கும்படி விண்ணகத்தந்தை தந்தார். இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசு, நரருலகில் வசிக்கும் போது, சமாரியா நாட்டின் ஸ்திரீயிடம், **"நீ தேவனுடைய *ஈவையும்,* தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய் அவர் உனக்கு ஜீவத்தண்ணீரை கொடுத்திருப்பார் என்றார்"** (யோவான். 4;10). வாலிபர்களே, இவ்வசனத்தில் இடம்பெற்றிருக்கும் "ஈவையும்" என்கிற வார்த்தைக்கு ஆங்கில வேதாகமத்தில் **"GIFT" (கிப்ட்)** என்கிற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அப்பதத்திற்கு "பரிசு" என்றும் நாம் பொருள் கொள்ளலாம். இத்திங்களில் தேவன் நமக்கு தந்திருக்கும் மகத்தான "பரிசு" பற்றி பக்குவமாக படித்திடுவோம் வாருங்கள்.

### "பரிசு" நமக்கு அன்பை வெளிப்படுத்தும் ......

நமது வாழ்வில் பிறந்த நாளையும், மண நாளையும் மற்ற சிறப்புப் பெற்ற நாட்களையும் நாமே சிலவேளைகளில் மறந்தே போகிறோம், சிலருடைய வாழ்த்துக்கள் நமது கரங்களில் தவழும்போதும், செவிகளில் எட்டும்போதும் தான் மறந்து மறைந்திருந்த அந்நினைப்பு இருள் நீங்கி ஒளிபெறுகிறது. அப்படி நாம் மறந்து போன நமது சிறப்பான நாட்களை. சிலர் வாழ்த்தி நினைவுபடுத்தும் வேளையில், அவர்கள் நம் மீது வைத்திருக்கும் அன்பு வெளிப்படுத்துகிறது.

பரலோகத்தின் தேவனும், ஆதியிலே அவர் தந்த "ஜீவ கனியை" மறந்தே போன நமக்கு, ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஆண்டவரோடு குளிர்ச்சியான வேளையில் பேசி உறவு கொண்டிருந்ததை எல்லாம் மறந்தே போன நமக்கு,

தனது குமாரனையே பரிசாக தந்தருளினார் (யோவான்.3;16). அவர் இப்படிச் செய்தது, நம் மீது அவர் வைத்திருக்கும் அளப்பறியா அன்புக்கு அடையாளமாக இருக்கிறது. நமது ஆண்டவர் அகிலத்தில் இறைபணி செய்கிறபோது, அவருக்கு இருந்த அன்பின் சீஷனும் அப்போஸ்தலனுமாகிய யோவான், தனது நிருபத்தில், "தேவன் அன்பாகவே இருக்கிறார், தம்முடைய ஒரேபேறான குமார்னாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது (1.யோவான்.4;9,10)."

வாலிபர்களாகிய நாம், ஒன்றை நிச்சயம் கவனிக்க வேண்டும். பரலோகத்தின் தேவன், நமக்கு கொடுத்த பரிசாகிய அவருடைய குமாரனைப் பற்றி நாம் சிந்திக்கையில் அவருக்கு 10 குமாரர்கள் இருந்து அதில் ஒன்றை, அவர் எடுத்து மனிதகுல விமோச்சனத்திற்காக, நமது இரட்சிப்புக்காக கல்வாரி சிலுவையில் மரிக்ககொடுக்கவில்லை. மாறாக பரிசுத்த ஆவியானவர் எழுதிக் கொடுத்த வசனம் சொல்கிறது **"ஒரேபேறான குமாரன்"** என்று. அறிவுக்கெட்டாத அந்த அன்பை நாம் உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

வாலிபர்களே, இயேசு, நமது பாவங்கள் எல்லாம் தன் மீது சுமத்தப்படபோகிறது என்ற நிலை வந்த போது, முகம் குப்புற விழுந்து பிதாவிடம் வேண்டியது முதல், "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கல்வாரியில் கதறிய அந்த நேரம் வரையும் அவருக்குத்தான் எத்தனை பாடுகள், சாட்டை அடி, அதுவும் கூர்மையான எலும்புத் துண்டுகள் அல்லது கூர்மையான கண்ணாடித் துண்டுகள் முனையில் இணைக்கப்பட்டு, சாட்டையால் அடிக்கப்படும் மனிதனின் தோலையும், சதையையும் பிய்த்து ரணவேதனை ஏற்படுத்தும், அப்படிப்பட்ட சாட்டையடி அது, முள் முடி, மாணிக்க கற்கள் பதித்த மனோகர முடியல்ல, முள்முடி அதுவும் கூர்மையான முள் அதில் ஓங்கி அந்த ரோம சேவகன் அடிக்கும் நேரத்தில், "தேவனே வலிக்கிறதே" என்று ஒருவேளை மனதிற்குள்ளாகவே நமது ஆண்டவர் அங்கலாய்த்துக் கொண்டிருந்தாரோ. எருசேலம் முதல் கொல்கொதா வரை அவர் எருசேலம் வீதிகளில் என்னவெல்லாம் நினைத்துக்கொண்டே நடந்து போனாரோ, இத்தனையும் எதற்காக பிரியமானவர்களே தேவன் நம்மீது வைத்த அன்பிற்காக, அதற்காக தானே, தன்னுடைய ஒரே பேறான குமாரன் என்றும் பாராமல் அவரையே பரிசாக தந்தார். நீங்கள் அவரை விசுவாசித்து, அவருக்காக உன் வாழ்க்கையை அர்ப்பணிப்பாயா? இயேசு நிச்சயம் உன்னை ஏற்றுக்கொள்வார், ஐயம் வேண்டாம்.

## "பரிசு" தனித்தன்மை கொண்டதாக இருக்கவேண்டும்.

வையகத்து மாந்தர்கள், தாங்கள் பெறும் பரிசு தன்னிகரற்றதாக இருக்க வேண்டுமென்று எண்ணம் கொள்வார்கள், கொடுப்பவனும், இதுவரை யாரும் தராத ஒரு பரிசை நாம் தரவேண்டும் என்று நினைப்புடையவனாக இருப்பான், தேவன் நமக்கு கொடுத்த "பரிசு" இப்படிப்பட்டதுதானோ என்று பார்ப்போம், வாருங்கள் வாலிபர்களே!

நம்முடைய ஆண்டவரின் பிறப்பே ஓர் அற்புதப் பிறப்பு, மனித உறவுகளாலே பிறந்தவரல்ல நமது மீட்பர். மாறாக, மரியாள் கர்ப்பவதியான செய்தி அறிந்த யோசேப்பு அவளை சேர்த்துக் கொள்ள ஐயப்பட்டபோது ஒரு தேவதூதன் சொப்பனத்தில் கூறுவதை கவனியுங்கள். **"அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது"** என்றான். (மத்.1;20). தமது ஆண்டவர் தன்னுடைய பிறப்பிலே தனித்தன்மை கொண்டவர்.

இயேசு, இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்த வேளையில், அவர் மாபெரும் போதகராக திகழ்ந்தாரென்பதில் இரண்டாம் சிந்தனைக்கு இடமில்லை, பார்புகழ் பெற்ற மலைப்பிரசங்கம் முடிந்த உடனே, ஜனங்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு, ஆச்சரியப்பட்டார்கள். (மத்.7;2 ,29). மற்றொரு சமயத்தில், காரென நெஞ்சிருண்டு, பொறாமையின் மேகம் கூடி, சதி என்னும் மழை பொழிவதினால், இயேசுவை சிறைபிடித்து துன்பத்தில் நனைக்க நினைத்து போர்ச்சேவகர்ளை பரிசேயர் அனுப்பினர். விலங்கிட வேண்டுமென விரைந்து வந்த வீரர்கள் மீண்டும், வெறுங் கையாய் திரும்பிப் போனார்கள், காரணம் தான் என்ன, வாள் எடுத்து விண்ணவர் விளையாடி விட்டாரோ, ஆம் பொற்கோவின் கைவாள் அல்ல, சொற்கோவின் வார்த்தை வாள், வீரர்கள் கூறுவதை உங்கள் செவிகள் கேட்கட்டும், "அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்றார்கள் (யோவான். 7;46). போதகத்திலும் நிகரில்லா நாதராக நித்திய ஜீவ வழியான இயேசு திகழ்ந்தார்.

சிலுவையில் தொங்கிய மனுக்குலத் தோழன் இயேசு தனது மரணத்திலும் தன்னிகரற்றவராக இருந்தார். விலா எலும்பாகிய மனைவியினால், "அந்த நீதிமானை (இயேசு) ஒன்றும் செய்ய வேண்டாம்" என்று எச்சரிக்கப்பட்டும், பரிசேயர் விரித்த பசப்பு வலையிலும், சதுசேயர் பரப்பிய சதிவலையிலும் விழாமல் இருந்திருக்கலாம் இந்த பிலாத்து; ஆனால் விழுந்து விட்டான், விழுந்த அவன் வியந்து கேட்கும் கேள்வியை வாசியுங்கள், "அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப் போனாரோ என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து: அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான்" (மாற்கு.15; 44). எந்த ஒரு மனுஷனையும் சிலுவையில் அறைந்து மரணத்தை ருசி பார்க்க வைக்கவேண்டும் என்பதின் நோக்கமே, அவன் நெடுநேரம் தொங்கி, தன் உடலில் சித்ரவதைகளை அனுபவித்து, இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் மரணத்தை சந்திப்பான் என்பதுதான். ஆனால் நமது ஆண்டவரோ வெகு சீக்கிரத்தில் மரணத்தை தழுவிக்கொண்டார், மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமானவராக பிலாத்துவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின நமது ஆண்டவர், மரணத்திலும் தனித்தன்மை கொண்டவராகவே இருந்தார்.

சிலுவையில் அவர் "எல்லாம் முடிந்தது" என்று சொல்லிய பின்பு, **"ஜீவனை விட்டார்"**, என்று வசனம் கூறுகிறது. சாதாரணமாக ஒருவன் மரித்தால் நாம், இந்த நேரத்தில் அவர் **உயிர் அல்லது ஜீவன் பிரிந்தது என்று சொல்லுவோம்,** ஆனால் பரிசுத்த ஆவியானவர், இயேசு "ஜீவனை விட்டார்" என்று யாத்துக்கொடுத்திருக்கிறார். அவரை விட்டு ஜீவன் பிரியாமல், ஜீவன் விடவும்,

அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரமுடையவராக இருந்தார் (யோவான்.10;18) என்று இதனால் நாம் கண்டு கொள்ளலாம். வாலிபர்களே இவர் தன் மரணத்திலும் வித்தியாசமுள்ளவராக இருக்கிறார். மரித்தவர் அப்படியே கல்லறையிலே இருந்து விட்டாரா? இல்லை இல்லை, மரணத்தை வீழ்த்தி, பாதாளத்தை புறம்பே தள்ளி ஜெயசீலராக, ரோமமுத்திரையை உடைத்து இத்தரைக்கு விமோச்சனத்தை உண்டாக்கினார். மரித்தார், இதோ இப்பொழுதோ, சதா காலமும் உயிரோடிருக்கிறார், எத்தனையோ நபர்கள் வேதாகமத்தில் மரணத்திலிருந்து தேவனால் எழுப்பப்பட்டார்கள். ஆனால் அவர்களை மரணம் மீண்டும் தன்னகத்தே இழுத்துக்கொண்டது, ஆனால் இவரோ இனி மரணத்தை ஒருகாலும் ருசி பார்க்கமாட்டார், தேவன், நமக்கு தந்த பரிசாகிய இயேசு, பிறப்பிலும், போதகத்திலும், மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் தனித்தன்மை உடையவராக இருக்கிறார், அது மாத்திரமா, நாம் ஒரு பரிசு மிக விலை உயர்ந்ததாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதுபோலவே, உயர்ந்த பரிசை தேவனும், இயேசுவும் நமக்காக கொடுத்தார்கள், பரலோக பாக்கியத்தை 33 1/2 ஆண்டுகள் இயேசு விட்டு வந்தார், பரிசுத்தமான அவர் மீது பாவம் சுமத்தப்பட்டது. நித்தியமான அவர் நமக்காக மரணத்தை ருசி பார்த்தார் இன்னும் பல காரியங்களை இயேசு நமக்காக செய்தார். அன்பையும் தனித்தன்மையும், விலைஉயர்ந்ததுமான பரிசையும் நமக்கவர் தந்திருக்கிறார், அதைப் பெற்றுக்கொண்ட நாம் அந்த பரிசுக்கு பாத்திரவான்களாக நடப்போம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம். ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# பலிகள் கூறும் செய்திகள்

1. **தகன பலிகள்** - முழுமையாக நாம் தேவனுக்கு நம்மை அற்பனிக்க வேண்டும் (லேவி. 1:1-17)
2. **போஜன பலிகள்** - தேவன் தந்த ஆசீர்வாதிற்காக நன்றி செலுத்த வேண்டும் (லேவி. 2:1-16)
3. **சமாதான பலிகள்** - தேவனோடு நமக்கிருக்கும் உறவை தொடர்ந்து சீர்செய்ய வேண்டும் (லேவி. 3:1-17)
4. **பாவ நிவாரண பலிகள்** - நமது பாவங்களுக்கான நிவாரணம் செலுத்தப்பட்டே ஆகவேண்டும் (லேவி. 4:1-35)
5. **குற்ற நிவாரண பலிகள்** - நாம் சக மனுஷருக்கு விரோதமாக செய்யும் ஒவ்வொரு குற்றங்களுக்காக நிவாராணம் செலுத்தப்பட வேண்டும் (லேவி. 5:1-6:7)

# தானியேல் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : **தானியேல் தீர்க்கன்**
காலம் : **ஏறக்குறைய கி.மு. 605 - 536**

## இந்நூலைப்பற்றி...

1. தானியேல் என்கிற பெயருக்கு **"தேவன் என் நியாயாதிபதி"** என்று பொருள்படும்.
2. தானியேல் ராஜகுலத்திலும், துரை மக்களிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வாலிபனாக இருந்தான். (1:3,6)
3. யோயாக்கீம் என்னும் ராஜாவின் மூன்றாம் வருடத்தில் இவன் பாபிலோனுக்கு அடிமையாக கொண்டு போகப்பட்டான்.
4. பாபிலோன் நாட்டில் இவனுக்கு "பெல்தெஷாத்சார்" என்கிற பெயர் கொடுக்கப்பட்டது (1:7)
5. இப்புத்தகத்தின் 1:1-2-4a, 8:1-12:13 பகுதிகள் எபிரேயத்திலும், 2:4b-7:28 பகுதிகள் அராமிக் மொழியிலும் எழுதப்பட்டிருக்கிறது. அன்றைய உலகின் மொழியாக அராமிக் இருந்ததினால் இப்படி எழுதப்பட்டிருக்கலாம்.
6. இந்நூலில் கருப்பொருள், "தேவன் தேசங்களை ஆளுகிறார்" என்பதாகும். (2:21, 4:17,32)
7. இந்நூலின் முதல் ஆறு அதிகாரங்கள் சரித்திர சம்பவங்களையும் அடுத்த ஆறு அதிகாரங்கள் தரிசனங்களையும் விவரிக்கிறது.

## இந்நூலின் செய்தி...

1. இந்நூலின் முக்கிய செய்தி யாதெனில், தேசங்களையும், இராஜ்ஜியங்களையும், தேவன் தனது முழு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்பதாகும்.
2. தேவன், ரோம சாம்ராஜ்யத்தின் நாட்களிலே என்றென்றைக்கும் அழியாத இராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என்பதே இந்நூலில் இடம் பெற்றிருக்கும் மிக முக்கியமான செய்தி.

சிறுவர் பகுதி :

# ஒரு மனிதனை கொன்ற பொய்

எனக்குப் பிரியமான தம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும் நல் மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இப் பகுதியை படித்து பயன்பெற்று வருகிறீர்கள் என்று நம்புகிறேன். இம்மாதமும் நீங்கள் ஒரு நல்ல பாடம் கற்றுக் கொள் வீர்கள் என நம்புகிறேன். சரி, பாடத்திற்கு செல்லலாமா?

ஒரு பொய்யினால் எப்படி ஒருவர் கொல்லப்பட்டார் என்று விவரிக்கும் இச்சம்பவம் பழைய ஏற்பாட்டில் இடம் பெற்று இருக்கிறது. (1.இராஜாக்கள்.13ம் அதிகாரத்தை வாசியுங்கள்). தீய நோக்கத்தையுடைய ராஜாவாகிய யெரோபெயாமுக்கு செய்தி சொல்லியனுப்பும்படியாக தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். தேவன் அந்த தீர்க்கதரிசிக்கு வேறொன்றையும் சொல்லியிருக்கிறார். அது என்னவென்று தெரியுமா? ராஜாவுக்கு செய்தியை சொன்ன உடனேயே அவனை தேவன் அவ்விடத்திலிருந்து போகச் சொன்னார். அவன் புசிப்பதற்கோ குடிப்பதற்கோ கூட அங்கே இருக்கக்கூடாது. தேவன் சொன்னது போல் அவனும் அவ்வாறே செய்தான். ராஜாவுக்கு செய்தி கொடுத்த உடனே, அவன் தன் வீட்டை நோக்கி பயணம் மேற்கொண்டான்.



ஆனால் அவன் போன வழியில், அவனை ஒரு வயதானவர் நிறுத்தினார். அவனை தன்னோடு தங்கவும், சாப்பிடவும் அழைத்தார். அந்த தீர்க்கதரிசி அதை மறுத்தான். ஏனென்றால் தேவன் சொல்லியிருந்தாரல்லவா?

ஆனால் அந்த வயதானவரோ, "தேவன் உன்னை என் வீட்டிற்கு அழைத்து, அப்பமும் தண்ணீரும் கொடுக்கச் சொன்னார்" என்றார். (13;18) பாருங்கள் அவன் பொய் சொன்னான்! அதையும் அந்த தீர்க்கதரிசி நம்பிவிட்டான்.

அவன் சாப்பிட்டு முடித்த பின்பு அவன் மறுபடியும் புறப்பட்டு வீட்டை நோக்கி போனான், வழியிலே ஒரு சிங்கம் அவனை கொன்று போட்டது. தேவன் சிங்கத்தை அவன் கீழ்ப்

படியாமைக்கு தண்டனையாக அனுப்பினார்.

சரி, இதிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்னவென்று பார்ப்போமா?

**முதலாவது**

நாம் தேவன் சொன்ன வார்த்தையை மீறக்கூடாது. ஒருவர் பரவாயில்லை என்று சொன்னாலும் மீறக்கூடாது.

**இரண்டாவது**

நாம் பொய் சொல்லக் கூடாது. அந்த வயதான தீர்க்கதரிசி பொய் சொன்னதால், தேவன் அனுப்பிய தீர்க்கதரிசி சிங்கத்தால் கொல்லப்பட காரணமானான். தேவன் பொய்யை வெறுக்கிறார். நாம் எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்படியே இருப்பீர்களா?

இந்த கல்வி ஆண்டில் தேவனை நாம் பற்றிக்கொண்டு, கீழ்ப்பட்டிருந்து அவருக்கு பயந்திருந்தால் நம்மேல் பிரியமாயிருக்கிறவர் நம்மை கைவிடமாட்டார். இந்த கல்வி ஆண்டில் தேவன் உங்களோடிருக்க நான் ஜெபிக்கிறேன். நிச்சயம் தேவன் உங்களுக்கு வெற்றியை தருவார். அடுத்தமாதம் சந்திப்போமா!

மனன வசனம் : நீதி.6:17

**Abel. R. Nayagam**

# ஆதியாகமத்தில் முக்கிய...

| நிகழ்வுகள் | நபர்கள் |
|---|---|
| 1. சிருஷ்டிப்பு (1,2 அதி) | 1. ஆபிரகாம் (12-25 அதி) |
| 2. வீழ்ச்சி (3 அதி) | 2. ஈசாக்கு (25-27 அதி) |
| 3. ஜலப்பிரளயம் (6-9 அதி) | 3. யாக்கோபு (28-37 அதி) |
| 4. தேசம் தோன்றுதல் (11 அதி) | 4. யோசேப்பு (38-50 அதி) |

# புதிய ஏற்பாடு இரட்சிப்பின் திட்டத்தை சபை போதிக்கிறது

**பெ**ந்தெகொஸ்தே நாளிலே தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்படி மூவாயிரம் பேர் கீழ்ப்படிந்ததாக அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் சீமோன் பேதுரு இயேசுவின் உயிர்த்தெழுதலை உணர்ச்சிமிகு உச்ச நிலையில் பிரசங்கித்து, "நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்". (அப்.2;36).

இந்த வார்த்தைகள் அவர்களை பலமாய் தாக்கியது, எனவே கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தாங்கள் குற்றவாளிகள் என உணர்ந்து, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" எனக் கேட்டார்கள். பேதுரு மறுமொழியாக, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றார். (அப்.2;38).

இவ்வதிகாரத்தின் பின்பகுதியில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றதை வாசிக்கிறோம். இரட்சிப்பிற்கு தங்கள் சுய விருப்பம் இல்லாமலேயே "அவர்கள் ஆட்கொள்ளப்பட்டனர்" எனும் நூதன உபதேசத்தை இவ்வசனப்பகுதி மறுக்கிறது. தங்கள் மனமாற்ற நிகழ்ச்சியில், இந்த மக்களுக்கு ஒரு அழமான உணர்வு உண்டாயிருந்தாலும், அதற்கான படிப்படியான நிறைவு அவர்களின் தீர்மானத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது., சாட்சியங்களை ஏற்று தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது அவரவரின் சுய தீர்மானத்தைச் சார்ந்திருந்தது.

## சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்

ஒருவரின் அங்கத்துவத்தை ஏற்றுக் கொள்ள சபைக்கென தொகுக்கப்பட்ட கொள்கைமுறை என எதையும் கிறிஸ்துவின் சபையார் பேசுவதில்லை, கிறிஸ்தவனாக மாற எடுக்கப்படவேண்டிய சில குறிப்பிட்ட நடவடிக்கை(படி) களை புதிய ஏற்பாடு கொடுக்கிறது.

இந்தப் படிகளை ஒருவர் ஏற்றுக் கொண்டு செயல்படும் போது, அவர் கிறிஸ்தவனாகிறார், அதே செயலின்படி சபையின் அங்கமாகவும் மாறுகிறார். ஒருவர் சபையின் அங்கமாவதற்குரிய தகுதியைப் பெற இதற்கு மேலான ஒரு செயல் (கொள்கை) எதிர் பார்க்கப்படுவதில்லை.

சபை ஸ்தாபிக்கப்பட்ட முதல் நாளில், மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அந்நாள் துவக்கம் இரட்சிக்கப்பட்ட அனைவரும் சபையிலே

சேர்க்கப்பட்டு வந்தார்கள். (அப். 2;47). இவ்வசனத்தின்படி தேவனே சபையில் அவர்களைச் சேர்த்துக் கொள்கிறார். ஆதலால், இம்மாதிரியைப் பின்பற்றும்போது, சபையில் நாம் வாக்களித்து ஒருவரையும் சேர்த்துக் கொள்வதுமில்லை, சில தொகுக்கப்பட்ட ஒரு கொள்கை பாடத்தை படிக்க வைப்பதன் மூலம் அங்கம் வகிக்க நிர்பந்தப்படுத்துவதுமில்லை, இரட்சகருக்கு கீழ்ப்படிவதைக் காட்டிலும் மேலான எதையும் கோர நமக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

## கிருபையினால் இரட்சிப்பு

நாம் பாவம் மிகுந்தவர்களாயிருப்பதால், சுயமாக நாம் இரட்சிப்பைப் பெற இயலாது. தேவனுடைய கிருபையில் நமக்கு இரட்சிப்பு வருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபே.2;8,9)." என்கிறார்.

## விசுவாசத்தைக் கொண்டு ...

கிருபையினாலே ... விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப்பட்டோம். கிருபை தேவனுடைய பகுதி. விசுவாசம் நமது பகுதி. தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிற, கிரியையோடு கூடிய விசுவாத்தையே அவர் அங்கீகரிக்கிறார் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் இரட்சிப்பை சாம்பாதிப்பதில்லை - அது தேவனுடைய வரம் (ஈவு) இருப்பினும், வாக்குத்தத்தமான இந்த ஈவைப் பெற வேண்டுமானால் அதற்கான நிபந்தனைகளையும் சந்திக்காமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது.

## மோசேயின் வாழ்க்கை

1. பார்வோனின் அரண்மனையில் இளவரசனாக 40 வருடங்கள் எகிப்தில் வாழ்ந்தான்
2. மீதியான் தேசத்தின் வனாந்தரத்தில் மேய்ப்பனாக 40 ஆண்டுகள் கழித்தான்
3. தேவ ஜனத்தின் வழிநடத்துனனாக 40 வருடம் பணி புரிந்தான்.

## இரட்சிப்பின் நிபந்தனைகள்

இந்த நிபந்தனைகள் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ளன. அவைகள் :

**1.** ஒருவன் சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும், ஏனெனில், "விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும்" (ரோமர்.10:17).

**2.** அவரை விசுவாசிக்க வேண்டும். ஏனெனில், விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாது காரியம் (எபி.11:16).

**3.** ஒருவன் தனது கடந்த கால பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும், ஏனெனில். "எங்குமுள்ள எல்லா மனுஷரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார்" (அப்.17:30).

**4.** ஒருவன் இயேசுவை கர்த்தர் என்று (தேவனுடைய குமாரன் என்று) அறிக்கையிட வேண்டும். "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணவேன்" என்று அவர் சொல்லியிருக்கிறார். (மத்தேயு. 10;32).

**5.** ஒருவன் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும், ஏனெனில் பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் .........." என்று கூறினார். (அப்.2;38).

## தனித்தனியான நடைமுறை

மேற்குறித்த ஒவ்வொரு படியும் தனிமைப்படுத்தப்பட்டு, விவாதித்து, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நபரும் தேவனுடைய அன்பைப் பெற அவைகளைத் தனித்தனியாக அமுல்படுத்தித்தான் ஆவிக்குரிய அந்த மறுபிறப்பை அடைய முடியும்.

ஆம், விசுவாசிக்கும்படியான ஒரு அறைகூவல் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தாங்கள் நம்பிக்கொண்டிருக்கும் கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எளியதொரு கோரிக்கையை தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றுவோரிடம் கேட்பதல்ல. அவர்களின் குற்ற உணர்வுடன் கூடிய இந்த மாற்றம் அவர்களுடைய முழு வாழ்க்கையையும் ஆக்கிரமிக்க வேண்டும். விசுவாசம் என்பது ஒரு உள்ளான மாற்றம். ஆனால் மனந்திரும்புதல் ஒருவர் தன் வாழ்க்கையில் எடுக்கும் தீர்மானத்தைக் காட்டுகிறது. அறிக்கையிடுதல், அந்த விசுவாசத்திற்கென ஒப்புக்கொடுத்தலையும், தனது வாழ்க்கை நெறியை மாற்றிக் கொள்ளத் தீர்மானிப்பதையும் காட்டுகிறது. ஞனாஸ்நானம் ஒருவரது மாற்றத்தை முத்தரித்து, தேவனுடைய கிருபையினாலும், கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையினாலும் பாவங்களை கழுவுகிறது. (அப்.22;16).

## ஞானஸ்நானத்தைக் குறித்து வலியுறுத்தல்

கிறிஸ்துவின் சபை ஞானஸ்நானத்தை அதிகமாக வலியுறுத்துகிறது என்கிற ஒரு எண்ணம் மக்கள் மத்தியில் உண்டு. புதிய ஏற்பாட்டில் நூறு வசனங்களுக்கு மேல் ஞானஸ்நானம் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகளில் ஒன்று என்பதை வலியுறுத்துவதன் மூலம் ஞானஸ்நானத்தை நாம் பேசுவது நியாயமானதே.

இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதை புதிய ஏற்பாடு போதிக்கிறது. (மாற்கு.16;16; அப்.2;38 அப். 22;16). புதிய ஏற்பாட்டு நிபுணர் எனக் கருதப்படும் புரூஸ் என்பவர் தனது குறிப்பில், ஞானஸ்நானம் பெறாமலேயே கிறிஸ்தவனாக இருப்பதாகக் கருதுவதை புதிய ஏற்பாடு அங்கீகரிப்பதில்லை என்று எழுதுகிறார்.

புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தின் நோக்கமாக பின்வரும் காரியங்களைக் குறப்பிடுகிறது.

1. இராஜ்யத்தில் பிரவேசிக்க (யோவான்.3;5).
2. கிறிஸ்துவின் இரத்தத்தை தொடர்பு கொள்ள (ரோமர்.6;3,4).
3. ஒருவர் கிறிஸ்துவுக்குட்பட (கலா.3;27).
4. இரட்சிக்கப்பட (மாற்கு.16;16.1. பேதுரு 3;21).
5. பாவமன்னிப்பிற்கு (அப்.2;38).
6. பாவங்கள் கழுவப்பட (அப்.22;16).
7. சபைக்குள் பிரவேசிக்க (1.கொரி.12;13, எபே.1;23).

## எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும்.

கிறிஸ்து முழு உலகத்தாருக்காகவும் மரித்ததினால் அவரது இரட்சிக்கும் கிருபை ஒவ்வொருவருக்கும் அழைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது. (அப்.10;34,35,வெளி.22;17) இரட்சிப்படையவோ, ஆக்கினைத் தீர்ப்படையவோ யாரும் முன்னாக தீர்மானிக்கப்பட்டு தேவனால் அழைக்கப்படுவதை நாம் விசுவாசிப்பதில்லை. சிலர் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவைச் சார்ந்து, கீழ்படிந்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கின்றனர். மற்றவர்கள் அவரது அழைப்பின் வேண்டுகோளை புறக்கணித்து ஆக்கினைத் தீர்ப்படைகின்றனர். (மாற்கு.16;16) இவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்கென முன் கூட்டி அடையாளமிட்டு இழந்துபோவதில்லை. மாறாக அவர்களாகவே தங்களுக்கு தெரிந்துகொள்ளும் பாதை அது.

கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் எடுக்கும் தீர்மானமே உங்கள் வாழ்வின் மிகப் பெரியத் தீர்மானம். அவரைப் புறக்கணிப்பது ஆவிக்குரிய, நித்திய அழிவைத் தரும். கிறிஸ்துவால் அளிக்கப்படும் இரட்சிப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளும்படி உங்களை விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம். கீழ்ப்படிந்து விசுவாசத்துடன் அவருக்கு முன் தாழ்மைப்படுங்கள், அவருடைய சபையில் அங்கமாகுங்கள்.

**ஜோ பார்நட்.**

# மனுஷர்மேல் விழுந்த கடமை

ஒவ்வொரு மனுஷருக்கும் சிறுவர்கள் முதற்கொண்டு பெரியோர்கள் வரை அவர்கள் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய அநேக கடமைகள் உண்டு. பிள்ளைகள் பள்ளிக்கு செல்வதையும், பாடங்களை படிப்பதும், அவர்களுக்கு கொடுக்கப்படும் வேலைகளை செய்வதையும் தங்கள் கடமையாக கொண்டுள்ளனர். பெற்றோர்கள் சம்பாதிப்பதும் குடும்பத்தை கவனிப்பதும் பிள்ளைகள் வளர்ப்பதும் பிள்ளைகளின் எதிர்காலத்தை குறித்து அக்கறை கொண்டவர்களாக சொத்துக்களை சேர்ப்பதும் பணத்தை சேமித்து வைப்பதும் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பதையும், பேரப்பிள்ளைகளை வளர்ப்பதையும் தங்களின் வாழ்க்கையின் கடமைகளாக கொண்டுள்ளனர். இவைகளை குறித்த கவலையே மனுஷனை ஆட்கொள்வதால், மனுஷன் தேவனால் அவருடைய மகிமைக்கென்று அவருடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதையும் சகலமும் அவருடைது. மனுஷனுடைய நடைகள் யாவையும் அவரே வாய்க்கப்பண்ணுகிறார். மனுஷனுடைய வாழ்க்கையில் தேவன் செய்வது எதுவோ அதுவே என்றென்றைக்கும் நிலைக்கும் என்னும் சத்தியத்தை அறியாதவனாகவும் தேவ சித்தத்தின்படியே அல்லாமல் சுயசித்தத்தின்படி வாழ மறக்காதவனாகவும் காணப்படுகிறான்.

## ஆகமங்களின் ஆசிரியர் மோசே தானோ?

1) மோசே தான் ஆசிரியர் என்று அந்நூல் கூறுகிறது (யாத். 17:14;24:4)

2) இயேசுகிறிஸ்து மோசே தான் எழுதினார் என்று கூறுகிறார் (மாற். 1:44; யோ. 7:19-23)

3) பவுலும் இந்நூலை மோசே எழுதினார் எனக் கூறுகிறார் (அப். 26:23)

எனவே மனுஷனுடைய இந்நிலையை குறித்து சாலொமோன் எனும் ஞானி ஆராய்ந்து எழுதியுள்ள பிரசங்கி என்னும் புத்தகம் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

மனுஷனுடைய நிலையை குறித்து இந்த புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களை அறிந்து கொள்ளும் முன் இந்த புத்தகத்தை எழுதின ஆசிரியரை பற்றி அறிந்துகொள்வது மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த புத்தகத்தை எழுதினவர் சாலொமோன் என்பவர். இவர் தாவீதின் குமாரனும் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவுமாயிருந்தவன் இவன் தேவனுடைய ஜனங்களை ஆளும்படி தோன்றினர் மூன்றாவது ராஜா. ஒரு நாள் இராத்திரியில் கர்த்தர் சாலொமோனுக்கு சொப்பனத்தில் தரிசனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். சாலொமோன் சிறுபிள்ளையாய் இருக்கும்போதே தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டவனானபடியால் தேவனுடைய ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும் ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும் என்றான். சாலொமோன் இந்த காரியத்தை கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது. தேவன் அவனை நோக்கி நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும் ஐசுவரியத்தைக் கேளாமலும் உன் சத்துருக்களின் பிராணனை கேளாமலும் நீ இந்த காரியத்தையே கேட்டு நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக் கொண்டபடியினால் உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன் இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை உனக்கு சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை என்றார்.

இவ்விதமாக தேவனால் சகல ஞானத்தையும் பெற்றுள்ள சாலொமோன் ஞானி வானத்தின் கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு தன் மனதை பிரயோகம் பண்ணி சூரியனுக்கு கீழே மனுஷர்களால் செய்யப்படுகிற காரியங்களெல்லாம் கவனித்துப் பார்த்து எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்று எழுதுகிறார்.

மாயையும், மனதுக்கு சஞ்சலமான மனுஷனுடைய கடமைகள் சிலவற்றை இக்கட்டுரையின் வாயிலாக பார்க்கலாம்.

இக்காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை படிக்க வைப்பதில்

மிகவும் அக்கறையுடையவர்களாக காணப்படுகிறார்கள். குழந்தைகள் பேச ஆரம்பித்ததுமே A,B,C,D, 1,2,3,4, என்று கற்றுக் கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர். காரணம் பிள்ளைகள் நன்றாக படித்து சமுதாயத்தில் ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாய் இருக்கிறது. பிள்ளைகளும் அதே சிந்தையை உடையவர்களாய் வளர்ந்து வருகின்றனர். இச்செயல் மனுஷன் தான் தேவனுக்கு பயந்து பயபக்தியாய் வாழவேண்டும் என்பதில் அவசியத்தையே அறியாத நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. உலகத்தின் ஞானத்தையும் அறிவையும் பெறாத நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. உலகத்தின் ஞானத்தையும் அறிவையும் பெறாத ஒருவனுக்கு அறிவில்லாதவன் பைத்தியக்காரன் என்ற முத்திரை பதிக்கப்படுகிறது. ஆனால் சாலொமோன் ஞானி ஞானமானது என்ன என்றும் பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் ஆராய்ந்து இவ்வாறு எழுதுகிறார். இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன். ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது ; ஆகிலும் அவர்கள் எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது. மூடன் எப்படி சாகிறானோ அப்படியே ஞானியும் சாகிறான். மூடனுக்குச் சம்பவிக்கிறதுபோல தேவனால் சகல ஞானத்தையும் பெற்ற சாலொமோன் ஞானிக்கும் சம்பவிக்கிறதே என்பதை அறிந்த அவன் அதிக ஞானமடைந்ததினால் காரியம் என்ன என்று சிந்தித்து இது மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்று எழுதுகிறார். (பிர.2;13-17). மனுஷன் தேவனுடைய மகிமைக்கென்றே உண்டாக்கப் பட்டிருப்பதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை முதலாவது தெய்வ பக்தி உள்ளவர்களாக வளர்ப்பதும் பிள்ளைகளும் தெய்வ பயத்துடன், பக்தியுடனும் வளர்வதுமே தங்கள் மேல் விழுந்த கடமை என்பதை சாலொமோன் நினைவூட்டுகிறார்.

ஒருவன் அதிகமாய் பிரயாசப்பட்டு சம்பாதித்த ஆஸ்திகளை அவனுக்கு பின் வரப்போகிறவனுக்கு அதை வைத்து போகிறான். அவனுக்கு பின் வரப்போகிறவன் புத்திமானாயிருப்பானோ மூடனாயிருப்பானோ அதை யார் அறிவார்? எனவே மனுஷன் இவ்வாழ்க்கையில் பிரயாசப்பட்டு ஞானமாய் சம்பாதித்த சகல வஸ்துக்களின் பேரிலும் வேறொருவன் அதிகாரியாகிறான். இதைத்தான் மனுஷன் தன் வாழ்க்கையில் கடமையாக கொண்டுள்ளான். இதனால் மனுஷனுடைய ஆத்துமாவிற்கு எந்த ஒரு நன்மையும் இல்லை. எனவே இதுவும் மாயையே ஒருவன் புத்தியுடனும் திறமையுடனும்

நிதானத்தோடும் பிரயாசப்பட்டு அநேக செல்வத்தை சேர்த்து வைக்கிறான். ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அதை சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும். இதைத்தான் மனுஷன் தன் கடமையாக கொண்டுள்ளான். இதுவும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாக உள்ளது. இவ்விதமான செயல்களினால் அவனுக்கு பலன் என்ன? இந்த மாயையான செல்வத்தை சம்பாதிக்க வேண்டும் என்பதே அவனுடைய இருதயத்தின் சிந்தனையாய் இருக்கிறது. அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளதும் அவன் வேலைகள் வருத்தமுள்ளதும் இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலும் இருப்பதில்லை. இதுதான் அவன் பிரயாசத்தின்பலன். இச்செயல்களால் அவனுடைய ஆத்துமாவிற்கு பலன் எதுவுமில்லை என்று அறிந்து கொள்ளும்போது இதுவும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. ஆனாலும் மனுஷன் இதைத்தான் கடமையாக எண்ணுகிறான்.

மனுஷன் மாயையான இவ்வுலக வாழ்க்கையில் வசதியாக வாழ எண்ணி அதிகமாக பிரயாசப்படுகிறான். அப்படி அவன் பிரயாசப்பட்டு சம்பாதித்தவைகள் எல்லாம் அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறது என்று காணும்போது இதுவும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. ஆனால் மனுஷனோ இதைத்தான் தன் கடமையாக எண்ணுகிறான்.

ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான் அவனுக்கு உடனாளியுமில்லை. அவனுக்கு பிள்ளைகளும் சகோதரர்களும் இல்லை அப்படியிருந்தும் அவன் படும் பிரயாசத்திற்கு முடிவே இல்லை; அவன் கண் ஐசுவரியத்தால் திருப்தியாகிறதுமில்லை; அவன் ஒரு நன்மையும் அனுபவியாமல் யாருக்காக பிரயாசப்படுகிறேன் என்று அவன் சிந்திக்கிறதுமில்லை. இதுவும் மாயை தீராத தொல்லையுமாயிருக்கிறது என்று சாலொமோன் எழுதுகிறான். மேலும் பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடையவதில்லை; செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதை காண்பதேயன்றி அவர்களுக்கு பிரயோஜமில்லை. செல்வப் பெருக்கோ அவனை தூங்கவிடுவதில்லை அதுமட்டுமல்ல ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே உண்டாகும்படி சேர்த்து வைக்கப்படுவதாக இருக்கிறது. இதை சாலொமோன் கண்ட கொடிய தீங்காக கருதுகிறார். ஆனால் மனுஷனோ இவைகளைத்தான் தனது கடமையாக எண்ணுகிறான்.

மாயையும் மனதுக்கு சஞ்சலமுமான இந்த வாழ்க்கை மனுஷன் தன் நாட்களிலெல்லாம் இருளிலே புசித்து, மிகவும் சலித்து நோயும் துன்பமும் அடைகிறான். ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று அநேகம் வருஷம் ஜீவித்து தீர்க்காயுசை அடைந்திருந்தாலும் அவன் ஆத்துமா அதைச் செல்வத்தால் திருப்தியடையாமலும் அவனுக்கு பிரேதக் கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால் அவனைப் பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி என்று ஞானி எழுதுகிறார். மனுஷன் தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வருகிறான் வந்ததுபோலவே நிர்வாணியாய் திரும்பப் போகிறான். அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை. இந்த உலக வாழ்க்கையில் அவன் படும் பிரயாசங்கள் அவனுடைய மறுமைக்கு எவ்விதத்திலும் பயனற்றதாக இருக்கிறது.

இவ்விதமான மாயையான காரியங்களை செய்வதில் மனுஷன் தன் வாலிப நாட்களில் அவனுடைய நெஞ்சின் வழிகளிலும் கண்ணின் காட்சியிலும் நடந்து பூரிப்படைகிறவனாய் இருக்கிறான் வாலிப நாட்களில் தேவனை நினைப்பது அரிதான காரியமாக காணப்படுகிறது. மனுஷனுடைய இளம் வயதும் வாலிபமும் மாயையே. மனுஷனுடைய சரீரத்தின் அவையவங்கள் பலவீனமடைந்து பயனற்றதாக மாறும் தீங்கு நெருங்கிக் கொண்டு வருகிறது. மனுஷன் தன்னுடைய வாழ்க்கையை ஒரு கணம் சிந்தித்து பார்த்தால் எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது.

இந்த அநித்தியமான உலக வாழ்க்கையின் மேன்மைக்காக மனுஷன் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் அற்பணித்தவனாக நாட்களை வீணாக்கி வாழ்ந்து வருவதை அறியாமலிருப்பது மிகவும் வேதனைக்குரியதாக காணப்படுகிறது. மனுஷன் உலகம் முழுவதையும் தனக்கு சொந்தமாக்கி கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்று இயேசு கூறுகிறார்.

எனவே, அநித்தியமான உலக வாழ்க்கையில் மனிதன் தன்னுடைய கடமைகளாக கருதி செய்துவரும் காரியங்களை காட்டிலும், மனுஷன் தேவனுடைய மகிமைக்கென்றே கிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை அறிந்து உணர்ந்து தன்னை உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளை கைக்கொண்டு வாழவேண்டும். இதுவே எல்லா மனுஷர் மேலும் விழந்த கடமை. (பிர.12;13).

தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

**ஹென்றி மோகன்.**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

பாடம் - 1

**ஆ**விக்குரிய உலகில் நம்முடைய அதிகாரம் எங்கிருந்து வருகிறது?

அ. அதிகாரம் என்றால் என்ன?
அதிகாரத்தின் மூலம் கீழ்ப்படிதலைக் கொண்டுவரக் கூடிய உரிமை.

ஆ. ஆகவே, எல்லா மனிதரிலும் யாருக்கு கீழ்ப்படிதலைக் கட்டளையிடக் கூடிய உரிமை இருக்கிறது?
நாங்கள் மிகு நம்பிக்கையோடு தேவன் ஒருவருக்கே அந்த அதிகாரம் உண்டென்று சொல்கிறோம்.

ஏன்? தயவு செய்து பின்வரும் காரணங்களை சிந்தித்துப் பாருங்கள்.

1. ஆதியாகமம் 1:1 – நாம் சிருஷ்டிகள்
2. சங்கீதம் 90:2 – அவர் நித்தியமானவர்
3. ஆதியாகமம் 1 – இந்த அதிகாரத்தில் ஒன்பது முறை தேவன் சொன்னாரென்றும், ஒவ்வொரு முறையும் அது அப்படியே ஆயிற்று, அது நல்லது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக 1, 3, 4 அந்தப்பிரகாரம், அவர் சர்வ வல்லவராக இருக்கிறார்.
4. ஆதி 1:27 – 2:7 மனிதன் தேவனிடமிருந்து வந்தான். அவருக்கே கடமைப்பட்டுள்ளான்.
5. எபிரேயர் 1:3 அவர் எல்லாவற்றையும் தன் முழு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

இ. பிதாவாகிய தேவன் அந்த அதிகாரத்தை இயேசுவுக்குக் கொடுத்தார்.

1. மத்தேயு 17:5, 28:18
2. இயேசுவின் உபதேசத்தைக் கேட்டவர்கள் அதிகாரத்தைக் கண்டு கொண்டார்கள்.
3. இயேசு பேசிய வார்த்தைகளும், போதித்த போதனைகளும் தேவனுடைய வார்த்தைகளும் போதனைகளுமே.

ஈ. இயேசு இந்த பூமியை விட்டு போகும் முன் அந்த அதிகாரத்தை தம் அப்போஸ்தலர்களுக்குக் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தத்தைச் செய்தார். அதை அவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி நிறைவேற்றினார்.

1. மத்தேயு 28:18-20
2. யோவான் 16:13
3. அப்போஸ்தலர் 1:8
4. அப்போஸ்தலர் 2:1-4

உ. அந்த அதிகாரத்தை அப்போஸ்தலர்களும் தேவனால் ஏவப்பட்ட மற்ற மனிதர்களும் பயன்படுத்தினார்கள். தேவனே சாட்சியாக இருந்து அற்புதங்களை நடப்பித்தார்.

1. எபிரேயர் 2:3,4

ஊ இந்த முறையின் முடிவாக தேவனால் ஏவப்பட்ட மனிதர்கள் தேவனுடைய வார்த்தையை எழுதிக் கொடுத்தார்கள்.

1. 1 கொரிந்தியர் 2:9-13 2. 1. தெசலோனி 2:13

3. 1. கொரிந்தியர் 14:37

எ. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட இந்த மனிதர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இந்த வார்த்தை, அதாவது பைபிள் முழுமையானதும் முற்றிலும் போதுமானதாக இருக்கிறது. இதற்கு மேல் எந்த ஒரு வெளிப்பாடுக்கும் அவசியம் இல்லை. உண்மையாக தேவனுடைய வார்த்தையோடு நாம் கூட்டவோ, குறைக்கவோ கூடாது.

1. யோவான் 16:13 2. 2 பேதுரு 1:3,4

3. யாக்கோபு 1:25 4. யூதா 3

5. உபாகமம் 4:2, 12:32 6. வெளி. 22:18,19

ஏ. பைபிள் தேவனால் ஏவப்பட்ட வார்த்தை என்று சொல்லுவதின் அர்த்தம் என்ன?

1. 'ஏவப்பட்ட' என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

2. பைபிள் தேவனால் கொடுக்கப்பட்டதா?

1. 2 தீமோத்தேயு 3:16 2. எரேமியா 1:9

3. 2 பேதுரு 1:21

**3. முடிவுரை**

அ. பிதாவாகிய தேவன் ஆவிக்குரியதிலும் மற்ற எல்லாவற்றிலும் மேலான அதிகாரமுடையவர்.

ஆ. அந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனிடத்தில் கொடுத்தார்.

இ. இயேசு தன் பிதாவாகிய தேவனுடைய வார்த்தைகளை, அப்போஸ்தலர்களிடமும், மற்ற ஏவப்பட்ட மனிதர்களிடமும் பேசவும், எழுதவும் அதிகாரம் கொடுத்தார்.

ஈ. அதனுடைய பலன்தான் பைபிள் தேவ வார்த்தைகளாகவே வெளிப்பட்டு ஆவிக்குரிய சகலத்திற்கும் அளவுகோலாக இருக்கிறது.

**G. Daniyal** **Charlie Di Palma**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible***

***Correspondence Courses,***

***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்-27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**